# பட்டயம்

மலர் - 05 பெப்ருவரி - 2009 இதழ் - 04

Date of Issue : 01-02-2009

Place of Publication : 86 / 222H, Main Road,
Panagudi - 627 109.
Tirunelveli District, Tamil Nadu.

Volume : 5

Issue : 4 Price Per Copy : Rs.5.00

## 2009

## சங்கீத பாடல் மலர்

இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே
இருக்கிறார். இனித் தீங்கைக் காணாதிருப்பாய் (செப்.3:15)

"THE KING OF ISRAEL, EVEN THE LORD, IS IN THE MIDST
OF THEE; THOU SHALT NOT SEE EVIL ANY MORE" (-ZEPH 3/15)

## ஓசன்னா ஆலய வெளியீடு

www.hosannahchurch.org

"இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவேன்" (ஆகாய்2:7)

# ஆசிரியர்கடிதம்

## (பிப்ரவரி - 2009)

கர்த்தருக்குப் பிரியமானவைகளை யோசித்தும், பேசியும், நடத்தியும், நடப்பித்தும், தாங்கியும் கொண்டிருக்கின்ற கர்த்தருடைய பிள்ளைகளே!

கர்த்தராகிய ஆண்டவர் எல்லா ஜாதிகளுக்கும் முன்பாக நீதியையும் துதியையும் முளைக்கப் பண்ணுவார் என்ற தீர்க்கதரிசனம் நிறைவேறும்படி ஜெபியுங்கள் (ஏசாயா 61/11)

சபைகளிலும் இல்லங்களிலும் எப்பொழுது துதி முளைக்கின்றதோ அப்பொழுது நம் வீடுகளில், சபைகளில், தேசத்தில் போராடும் பாவம், சாபம், பிசாசு, துன்மார்க்கர் யாவும் ஓடிப்போகும்.

கர்த்தருடைய பிள்ளைகளே! இந்த மலர் சங்கீத பாடல் மலர். சங்கீதம் ஒன்று முதல் ஐம்பது வரையுள்ள வசனங்களைக் கொண்டு பாடல் வடிவில் துதிப்பதற்காக, ஆராதிப்பதற்காக அமைக்கப்பட்டு உள்ளது.

ஆதியும் அந்தமுமானவரே என்ற பாடலின் இராகத்தில் அமைந்துள்ளது. ஒருவர் ஒரு அடியைப் பாட மற்றவர் அதே அடியைப் பாட வேண்டும். முடிவில் அல்லேலூயா என்று சேர்ந்து பாட வேண்டும்.

துதியுங்கள்!
ஆர்ப்பரியுங்கள்!!

கர்த்தரைக் கொண்டாடுங்கள்!!!
கர்த்தருக்குள் மகிழுங்கள்!!!!

கர்த்தர் தாமே உங்களையும் என்னையும் சியோனிலிருந்து ஆசீர்வதிக்கவே ஆசீர்வதிப்பாராக.

ஆமென்!
அல்லேலூயா!!
ஓசன்னா!!!

இவண்,
Rev. Dr. **Princeton Joy**
ஆசிரியர்.

## சங்கீதம் - 1

1. சத்திய வேதம் தந்தவரே!
சத்துவம் யாவும் தருபவரே! அல்லேலூயா (4)
2. நீர்க்கால்கள் ஓரம் நடுபவரே!
கனியுள்ள ஜீவியம் தருபவரே! அல்லேலூயா (4)
3. செய்வதை வாய்க்கச் செய்பவரே!
வழித்துணையாய் எமக்கிருப்பவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 2

4 விரோதிக்கும் மக்களைக் கலக்குபவரே!
குயக்கலம் போலே உடைப்பவரே! அல்லேலூயா (4)
5. சீயோனில் உள்ள இராஜாவே!
அபிஷேக வல்லமை நிறைந்தவரே! அல்லேலூயா (4)
6. ஆத்மாக்கள் அநேகம் தருபவரே!
பூமியின் எல்லை தருபவரே! அல்லேலூயா (4)
7. முத்தங்கள் எமக்குத் தருபவரே!
முத்தங்கள் எம்மால் பெறுபவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 3

8. இரட்சிக்கும் கரத்தை உடையவரே!
கேடகம் மகிமையானவரே! அல்லேலூயா (4)
9. தலையை உயர்த்தும் தலைவரே!
செவியைக் சாய்த்துக் கேட்பவரே! அல்லேலூயா (4)
10. நித்திரையில் என்னைத் தாங்குபவரே!
விழிப்பிலும் என்னைத் தாங்குபவரே! அல்லேலூயா (4)
11. படைகள் வந்தாலும் காப்பவரே!
துன்மார்க்கர் பற்கள் உடைப்பவரே! அல்லேலூயா (4)
12. இரட்சிக்கும் வல்லமை உடையவரே!
ஆசீர்வாதங்கள் தருபவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 4

13. விசாலம் எமக்குத் தருபவரே!
இரங்கி விண்ணப்பம் கேட்பவரே! அல்லேலூயா (4)
14. பக்தியுள்ளோனைத் தெரிபவரே!
நன்மைகள் எமக்குக் காட்டுபவரே! அல்லேலூயா (4)
15. முகத்தின் ஒளியை வீசுபவரே!
அகத்தில் சந்தோஷம் தருபவரே! அல்லேலூயா (4)
16. சமாதானத்தைத் தருபவரே!
சுகமாய் தங்கப் பண்ணுபவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 5

17. தியானத்தை என்றும் காண்பவரே!
ஜெபத்தை என்றும் கேட்பவரே! அல்லேலூயா (4)

18. துன்மார்க்கம் என்றும் வெறுப்பவரே!
அக்கிரமக்காரரை வெறுப்பவரே! அல்லேலூயா (4)
19. கெம்பீரித்திடவே பண்ணுபவரே!
களிகூர்ந்திடவே செய்பவரே! அல்லேலூயா (4)
20. ஆசீர்கள் யாவும் தருபவரே!
காருண்யத்தாலே சூழ்பவரே! அல்லேலூயா (4)

**சங்கீதம்** – 6

21. பெலவீனங்கள் போக்குபவரே!
வியாதிகள் யாவும் நீக்குபவரே! அல்லேலூயா (4)
22. வியாகுலம் யாவும் தீர்ப்பவரே!
கண்ணீர்கள் யாவும் துடைப்பவரே! அல்லேலூயா (4)
23. எந்தனின் விண்ணப்பம் கேட்பவரே!
ஜெபங்கள் யாவும் ஏற்பவரே! அல்லேலூயா (4)

**சங்கீதம்** – 7

24. சத்துருவுக்கு விலக்குபவரே!
எனக்காய் என்றும் விழிப்பவரே! அல்லேலூயா (4)
25. நியாயத் தீர்ப்புகள் செய்பவரே!
நிலைநிறுத்துகின்றவரே! அல்லேலூயா (4)
26. இதயங்களை அறிபவரே!
இரட்சிப்பின் கேடகம் உடையவரே! அல்லேலூயா (4)
27. மரண ஆயுதம் உடையவரே!
பட்டயம், அம்புகள் உடையவரே! அல்லேலூயா (4)
28. தீவினை சிரசில் திருப்புபவரே!
கொடுமை தலைமேல் இறக்குபவரே! அல்லேலூயா (4)

**சங்கீதம்** – 8

29. மேன்மை நாமமே உடையவரே!
மேலான மகத்துவம் உடையவரே! அல்லேலூயா (4)
30. பாலகர் பாடச் செய்பவரே!
நட்சத்திரம் சந்திரன் படைத்தவரே! அல்லேலூயா (4)
31. மனுஷனாம் என்னை நினைப்பவரே!
விசாரித்தருளும் எந்தன் நேசரே! அல்லேலூயா (4)
32. மகிமையும் கனமும் தருபவரே!
ஆளுகை யாவும் தருபவரே! அல்லேலூயா (4)

**சங்கீதம்** – 9

33. அதிசயங்கள் செய்பவரே!
உம்மிலே மகிழச் செய்பவரே! அல்லேலூயா (4)
34. நியாயாதிபதியாயிருப்பவரே!
நியாயாசனத்தில் அமர்பவரே! அல்லேலூயா (4)
35. நெருக்கப்படுகையில் எந்தன் தஞ்சமே!
கைவிடாத எந்தன் கர்த்தரே! அல்லேலூயா (4)

36. விசாரணைகள் செய்பவரே!
சாட்சிகள் சொல்லப் பாத்திரரே! அல்லேலூயா (4)
37. மரணவாசல் போக்குபவரே!
குழியில் விழாது காப்பவரே! அல்லேலூயா (4)
38. நரகம் உண்டென்று சொல்பவரே!
பரலோகம் உண்டென சொல்பவரே! அல்லேலூயா (4)
39. துன்மார்க்கர் பெலனை முறிப்பவரே!
பயத்தை அவர்க்குக் கொடுப்பவரே! அல்லேலூயா (4)

## **சங்கீதம்** – 10

40. திக்கற்றவர்க்காய் எழுபவரே!
ஏழைகளை என்றும் நினைப்பவரே! அல்லேலூயா (4)
41. திக்கற்றப் பிள்ளைகட்கு சகாயரே!
துன்மார்க்கர் புயத்தை முறிப்பவரே! அல்லேலூயா (4)
42. எக்காலத்துக்கும் இராஜாவே!
கானானியரை அழிப்பவரே! அல்லேலூயா (4)
43. ஸ்திர இதயம் தருபவரே!
பலவந்தம் யாவும் தடுப்பவரே! அல்லேலூயா (4)

## **சங்கீதம்** – 11

44. பட்சிக்கு அடைக்கலம் தருபவரே!
பட்சிக்காதபடி காப்பவரே! அல்லேலூயா (4)
45. இருளின் அம்புகள் முறிப்பவரே!
அஸ்திபாரங்கள் காப்பவரே! அல்லேலூயா (4)
46. பரிசுத்த ஆலயம் உடையவரே!
சிங்காசனத்தில் இருப்பவரே! அல்லேலூயா (4)
47 . மனுஷராம் எம்மைக் காண்பவரே!
இதயங்களை சோதிப்பவரே! அல்லேலூயா (4)
48. சோதித்து எம்மை அறிபவரே!
கொடியவரை வெறுப்பவரே! அல்லேலூயா (4)
49. கண்ணிகளாலே பிடிப்பவரே!
அக்கினியாலே அழிப்பவரே! அல்லேலூயா (4)
50. நீதியில் பிரியமுள்ளவரே!
நல்லவனை என்றும் பார்ப்பவரே! அல்லேலூயா (4)

## **சங்கீதம்** – 12

51. பக்தியுள்ளோனைக் காப்பவரே!
உண்மையுள்ளோனைக் காப்பவரே! அல்லேலூயா (4)
52. இச்சக உதடு அறுப்பவரே!
பெருமை உதடு அறுப்பவரே! அல்லேலூயா (4)
53. துன்மார்க்கன் நாவு கட்டுபவரே!
ஏழைகட்காய் யுத்தம் செய்பவரே! அல்லேலூயா (4)
54. பரிசுத்த சொற்கள் உடையவரே!
வார்த்தையால் யுத்தம் செய்பவரே! அல்லேலூயா (4)

55. சண்டாளர்கட்கு விலக்கும் தேவா!
துன்மார்க்கர்கட்கு விலக்கும் மூவா! அல்லேலூயா (4)

## சங்கீதம் – 13

56. என்னை என்றென்றும் நினைப்பவரே!
முகத்தை எனக்குக் காட்டுபவரே! அல்லேலூயா (4)
57. சஞ்சலம் யாவும் தீர்ப்பவரே!
சத்ருக்களையோ தாழ்த்துபவரே! அல்லேலூயா (4)
58. மரண நித்திரை நீக்குபவரே!
கண்களைத் தெளிவாய் ஆக்குபவரே! அல்லேலூயா (4)
59. கிருபை எனக்குத் தருபவரே!
இரட்சிப்பால் களிகூரச் செய்பவரே! அல்லேலூயா (4)
60. இதயம் களிகூரச் செய்பவரே!
நன்மைகள் யாவும் செய்பவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் – 14

61. பட்சிக்கும் பாவிக்கு விலக்கும் தேவா!
நீதிமானோடே இருப்பவரே! அல்லேலூயா (4)
62. அடைக்கலமே தருபவரே!
ஆலோசனைகள் அருள்பவரே! அல்லேலூயா (4)
63. சத்ருக்களைப் பயப்படுத்துபவரே!
நீதிமான் பிள்ளையைக் காப்பவரே! அல்லேலூயா (4)
64. சீயோனிருந்து இரட்சிப்பவரே!
சிறையிருப்பைத் திருப்புபவரே! அல்லேலூயா (4)
65. களிப்பு யாக்கோபுக்குத் தருபவரே!
மகிழ்ச்சி இஸ்ரேலுக்கு அருள்பவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் – 15

66. கூடாரத்தில் இடம் தருபவரே!
பரிசுத்த பர்வதம் அருள்பவரே! அல்லேலூயா (4)
67. உத்தமத்தினையோ விரும்பும் தேவா!
உண்மையினையோ விரும்பும் மூவா! அல்லேலூயா (4)
68. நீதியை நடப்பி என்றவரே!
சத்தியம் பேசு என்றவரே! அல்லேலூயா (4)
69. நாவையடக்கச் சொன்னவரே!
வாக்கு மாறாதே என்றவரே! அல்லேலூயா (4)
70. நல்லோரை ஆதரி என்றவரே!
சத்ருவைக் கட்டிப்போடு என்றவரே! அல்லேலூயா (4)
71. வட்டிக்குக் கொடாதே என்றவரே!
பரிதானம் வாங்காதே என்றவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் – 16

72. ஆத்தும ஆதாயம் விரும்பும் தேவா!
அந்நிய தேவரை வெறுக்கும் மூவா! அல்லேலூயா (4)

73. எந்தனின் சுதந்தரமானவரே!
பாத்திரப் பங்குமானவரே! அல்லேலூயா (4)
74. எந்தன் சுதந்தரம் காப்பவரே!
சிறப்பு சுதந்தரம் தருபவரே! அல்லேலூயா (4)
75. நேர்த்தியாம் பங்கு தருபவரே!
நல்லாலோசனைகள் தருபவரே! அல்லேலூயா (4)
76. என்னை உணர்த்தும் எந்தன் தேவனே!
என்முன் எப்போதும் இருப்பவரே! அல்லேலூயா (4)
77. வலப்பக்கத்தில் இருப்பவரே!
அசைக்கப்படாது காப்பவரே! அல்லேலூயா (4)
78. இதயப் பூரிப்பு தருபவரே!
மகிமை களிகூரச் செய்பவரே! அல்லேலூயா (4)
79. நம்பிக்கை வாழ்வு தருபவரே!
ஆத்மாவைப் பாதாளம் விடாதவரே! அல்லேலூயா (4)
80. அழிவைக் காண விடாதவரே!
ஜீவமார்க்கத்தைக் காட்டுபவரே! அல்லேலூயா (4)
81. சமூக ஆனந்தம் தருபவரே!
நித்திய பேரின்பம் தருபவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 17

82. எனக்கு நியாயம் செய்பவரே!
இதயம் சோதித்தறிபவரே! அல்லேலூயா (4)
83. புடமிட்டு என்னைப் பார்ப்பவரே!
வாயோ மீறாது காப்பவரே! அல்லேலூயா (4)
84. வார்த்தையால் யுத்தம் செய்பவரே!
கால் வழுவாது காப்பவரே! அல்லேலூயா (4)
85. உமது வழியில் நடத்துபவரே!
எந்தனின் வார்த்தை கேட்பவரே! அல்லேலூயா (4)
86. கரத்தினாலே இரட்சிப்பவரே!
அதிசய கிருபை அருள்பவரே! அல்லேலூயா (4)
87. கண்மணி போலே காப்பவரே!
செட்டையின் நிழல் வைப்பவரே! அல்லேலூயா (4)
88. பட்டயத்தால் யுத்தம் செய்பவரே!
கொடியர் கைக்கு விலக்கும் தேவா! அல்லேலூயா (4)
89. நீதியல் தரிசிக்கச் செய்பவரே!
விழிக்கையில் சாயலைக் காட்டுபவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 18

90. இரட்சணியக் கொம்பாய் இருப்பவரே!
இரட்சிக்கும் தேவனாய் இருப்பவரே! அல்லேலூயா (4)
91. இரட்சகராய் எனக்கிருப்பவரே!
தேவாதி தேவனாய் இருப்பவரே! அல்லேலூயா (4)

92. கோட்டையாய் எனக்கிருப்பவரே!
கேடகமாய் என்னோடு இருப்பவரே! அல்லேலூயா (4)
93. துதிக்குப் பாத்திரரானவரே!
எந்தனின் பெலனுமானவரே! அல்லேலூயா (4)
94. மரணக்கட்டு அவிழ்ப்பவரே!
பாதாளக் கட்டு அவிழ்ப்பவரே! அல்லேலூயா (4)
95. துர்ச்சனப் பிரவாகம் தீர்ப்பவரே!
நெருக்கம் யாவும் நீக்குபவரே! அல்லேலூயா (4)
96. கோபமும் சத்தமும் உடையவரே!
அக்கினி, கல்மழை உடையவரே! அல்லேலூயா (4)
97. நாசியில் சுவாசம் உடையவரே!
நாசியில் புகையும் உடையவரே! அல்லேலூயா (4)
98. வாயிலே வார்த்தை உடையவரே!
வாயிலே அக்கினி உடையவரே! அல்லேலூயா (4)
99. கரத்தால் தூக்கி விடுபவரே!
விசால இடத்தில் வைப்பவரே! அல்லேலூயா (4)
100. அம்பினால் யுத்தம் செய்பவரே!
மின்னலால் யுத்தம் செய்பவரே! அல்லேலூயா (4)
101. பகைப்போர்களுக்கு விலக்குபவரே!
பலத்த சத்துருவுக்கு விலக்குபவரே! அல்லேலூயா (4)
102. இரங்குவோனுக்கு இரங்குபவரே!
மாறினால் மாறும் மாதேவனே! அல்லேலூயா (4)
103. மேட்டிமைக் கண்ணைத் தாழ்த்துபவரே!
எந்தனின் விளக்கை ஏற்றுபவரே! அல்லேலூயா (4)
104. சேனைகள் மேல் வெற்றி தருபவரே!
மதில்கள் மேல் ஜெயம் தருபவரே! அல்லேலூயா (4)
105. கன்மலை, கேடகமானவரே!
பலத்தால் இடைகட்டும் என் தேவனே! அல்லேலூயா (4)
106. உயர்தலங்களில் நிறுத்துபவரே!
மான்கால்கள் எனக்குத் தருபவரே! அல்லேலூயா (4)
107. யுத்தம் செய்திட கற்பிப்பவரே!
வெண்கல வில்லை வளைப்பவரே! அல்லேலூயா (4)
108. இரட்சிப்பின் கேடகம் தருபவரே!
வலக்கரத்தாலே தாங்குபவரே! அல்லேலூயா (4)
109. பெரியவனாக மாற்றுபவரே!
கால் வழுவாது காப்பவரே! அல்லேலூயா (4)
110. சத்துருக்கள் மேல் வெற்றி தருபவரே!
சண்டைகளுக்கு விலக்குபவரே! அல்லேலூயா (4)
111. பழிக்குப் பழி வாங்குபவரே!
கொடியருக்கு விலக்குபவரே! அல்லேலூயா (4)
112. கிருபை எமக்குச் செய்பவரே!
இரட்சிப்பை எமக்கு அருள்பவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 19

113. இயற்கையால் மகிமைப்படுபவரே!
குறைவற்ற வேதம் தந்தவரே! அல்லேலூயா (4)
114. உயிர்ப்பிக்கும் வேதம் தந்தவரே!
தெளிவிக்கும் கற்பனை தந்தவரே! அல்லேலூயா (4)
115. சத்திய சாட்சி உடையவரே!
சத்திய நியாயம் உடையவரே! அல்லேலூயா (4)
116. எந்தனை மீட்டுக் கொண்டவரே!
எந்தனை உமக்காய் மீட்டவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 20

117. ஆபத்தில் ஜெபத்தைக் கேட்பவரே!
கூப்பிடுகையிலே கேட்பவரே! அல்லேலூயா (4)
118. ஒத்தாசை அனுப்பிடும் எந்தன் இயேசுவே!
ஆதரித்திடுகின்ற எந்தன் இயேசுவே! அல்லேலூயா (4)
119. காணிக்கை, பலிகளை ஏற்பவரே!
இரட்சிப்பின் கொடியைத் தருபவரே! அல்லேலூயா (4)
120. வலக்கரத்தால் இரட்சிப்பவரே!
இரட்சிப்பின் வல்லமைகள் உடையவரே! அல்லேலூயா (4)
121. இரதங்கள், குதிரைகள் முறிப்பவரே!
சூனியக்காரரை முறிப்பவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 21

122. பரிந்து பேசுதலைக் கேட்பவரே!
நித்திய ஜீவன் உடையவரே! அல்லேலூயா (4)
123. நித்திய ஆசீர் உடையவரே!
நித்திய ஜீவன் உடையவரே! அல்லேலூயா (4)
124. நித்திய மகிமை உடையவரே!
நித்திய மேன்மை உடையவரே! அல்லேலூயா (4)
125. நித்திய சரீரம் உடையவரே!
நித்திய மகத்துவம் உடையவரே! அல்லேலூயா (4)
126. நித்திய இரட்சிப்பு உடையவரே!
நித்திய பேரின்பம் உடையவரே! அல்லேலூயா (4)
127. அசைக்கப்படாது இருப்பவரே!
சத்துருவை எட்டிப்பிடிப்பவரே! அல்லேலூயா (4)
128. விரோதிப்போரைக் கண்டுபிடிப்பவரே!
வலக்கரத்தால் பிடிப்பவரே! அல்லேலூயா (4)
129. நரக அக்கினியில் தள்ளுபவரே!
அக்கினியால் யுத்தம் செய்பவரே! அல்லேலூயா (4)
130. துன்மார்க்கர் கனியை அழிப்பவரே!
துன்மார்க்கர் சந்ததியை அழிப்பவரே! அல்லேலூயா (4)
131. துன்மார்க்கர் பொல்லாங்கை ஒழிப்பவரே!
துன்மார்க்கர் தீவினையை அழிப்பவரே! அல்லேலூயா (4)

132. பலத்திலே எழுந்தருள்பவரே!
வல்லமை யாவும் உடையவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் – 22

133. துதிகளுக்குள்ளிருப்பவரே!
பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரே! அல்லேலூயா (4)
134. கூப்பிட்டால் தப்புவிப்பவரே!
நம்புவோர்களின் அடைக்கலமே! அல்லேலூயா (4)
135. கருவிருந்தே எந்தன் தேவனே!
கருவிருந்தே காப்பவரே! அல்லேலூயா (4)
136. எருது காளைகளைத் துரத்துபவரே!
சிங்கங்கள் எல்லாம் துரத்துபவரே! அல்லேலூயா (4)
137. நாய்களை எல்லாம் துரத்துபவரே!
துன்மார்க்கர் கைக்கு விலக்குபவரே! அல்லேலூயா (4)
138. பெலவீனத்துக்கு விலக்குபவரே!
வேதனைக்கெல்லாம் விலக்குபவரே! அல்லேலூயா (4)
139. நிந்தைக்கு எல்லாம் விலக்குபவரே!
அவமானம் எல்லாம் மாற்றுபவரே! அல்லேலூயா (4)
140 அருமையானதைக் காப்பவரே!
நாய்களின் துஷ்டத்துக்கு விலக்குபவரே! அல்லேலூயா (4)
141. சிங்கவாயினின்று இரட்சிப்பவரே!
கொம்பிலே சிக்காது காப்பவரே! அல்லேலூயா (4)
142. பயபக்திக்குப் பாத்திரரே!
கனத்துக்கு எல்லாம் பாத்திரரே! அல்லேலூயா (4)
143. துன்பத்தில் தாங்கிடும் தூயவரே!
பொருத்தனை, துதிக்குப் பாத்திரரே! அல்லேலூயா (4)
144. புசிப்பு, திருப்தி தருபவரே!
இதயம் வாழச் செய்பவரே! அல்லேலூயா (4)
145. எழுப்புதல் உண்டாகச் செய்பவரே!
தொழுகை பெருகச் செய்பவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் – 23

146. நித்திய மேய்ப்பரானவரே!
தாழ்ச்சியை விலக்கிடும் தூயவரே! அல்லேலூயா (4)
147. புல்லும் தண்ணீரும் தருபவரே!
போஷித்து எம்மைக் காப்பவரே! அல்லேலூயா (4)
148. நித்திய போஜனம் தருபவரே!
நித்திய சமாதானம் தருபவரே! அல்லேலூயா (4)
149. ஆத்துமாவை நிதம் தேற்றுபவரே!
நீதியின் பாதையிலே நடத்துபவரே! அல்லேலூயா (4)
150. மரண இருளிலும் காப்பவரே!
பொல்லாப்பு வராது காப்பவரே! அல்லேலூயா (4)
151. என்னோடே கூட இருப்பவரே!
எப்போதும் என்னைத் தேற்றுபவரே! அல்லேலூயா (4)

152. ஆவியால் என்னை நிரப்புபவரே!
சத்துருமுன் வெற்றியைத் தருபவரே! அல்லேலூயா (4)
153. நன்மையைத் தொடர்ந்திடச் செய்பவரே!
கிருபையும் ஜீவனும் தருபவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 24

154. பூமியும் நிறைவும் உடையவரே!
குடிகள் யாவையும் படைத்தவரே! அல்லேலூயா (4)
155. பர்வதம் ஏறச் செய்பவரே!
பரிசுத்த ஸ்தலத்தில் வைப்பவரே! அல்லேலூயா (4)
156. ஆசீர்வாதங்கள் தருபவரே!
நீதியின் பாதையைத் திறப்பவரே! அல்லேலூயா (4)
157. இதய வாசல்கள் திறப்பவரே!
மகிமையாய் உள்ளே வருபவரே! அல்லேலூயா (4)
158. வல்லமை நிறைந்த இயேசுவே!
பராக்கிரமம் நிறைந்த கர்த்தரே! அல்லேலூயா (4)
159. யுத்தத்தில் வல்ல கர்த்தரே!
மகிமையின் ஆலயம் தருபவரே! அல்லேலூயா (4)
160. சேனைகளின் கர்த்தரே!
மகிமை நிறைந்த ராஜாவே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 25

161. விசேஷ வழிகள் உடையவரே!
விசேஷ சத்தியங்கள் உடையவரே! அல்லேலூயா (4)
162. அநாதி இரக்கம் உடையவரே!
அநாதி காருண்யம் உடையவரே! அல்லேலூயா (4)
163. பாவங்கள் நினையாதிருப்பவரே!
கிருபையால் நினைத்தருள்பவரே! அல்லேலூயா (4)
164. நல்லவர், உத்தமரானவரே!
கிருபை, சத்தியம் உடையவரே! அல்லேலூயா (4)
165. நல்வழி காட்டும் நல்ல தேவனே!
மன்னிக்கும் மாண்பு உடையவரே! அல்லேலூயா (4)
166. ஆத்தும நன்மைகள் தருபவரே!
உமது இரகசியம் சொல்பவரே! அல்லேலூயா (4)
167. வலைக்குக் காலை விலக்குபவரே!
தனிமை, சிறுமை தீர்ப்பவரே! அல்லேலூயா (4)
168. இதய வியாகுலம் போக்குபவரே!
இடுக்கண்கள் எல்லாம் நீக்குபவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 26

169. தள்ளாடவிடாத தேவனே!
என்னையும் பரீட்சித்து அறிபவரே! அல்லேலூயா (4)
170. கிருபை முன்பாக வைப்பவரே!
சத்தியப் பாதையைத் தருபவரே! அல்லேலூயா (4)
171. அதிசயம் யாவும் செய்பவரே!
மகிமையின் ஸ்தானம் உடையவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 27

172. எந்தனின் வெளிச்சமானவரே!
எந்தனின் இரட்சிப்புமானவரே! அல்லேலூயா (4)
173. ஜீவனின் பெலனுமானவரே!
தைரியம் ரத்தத்தால் தருபவரே! அல்லேலூயா (4)
174. மாம்சத்தைப் பட்சிக்க விடாதவரே!
இடறி விழுந்திடப் பண்ணுபவரே! அல்லேலூயா (4)
175. யுத்தத்தில் ஜெயமோ தருபவரே!
மகிமையைப் பார்த்திடச் செய்பவரே! அல்லேலூயா (4)
176. சத்தியம் எனக்குப் போதிப்பவரே!
மகிமையின் ஆலயம் தருபவரே! அல்லேலூயா (4)
177. கூடாரத்தில் மறைத்துக் காப்பவரே!
கூடார மறைவினில் காப்பவரே! அல்லேலூயா (4)
178. கன்மலையின் மேலாக உயர்த்துபவரே!
சத்துருக்கள் மேலாக உயர்த்துபவரே! அல்லேலூயா (4)
179. ஆனந்தபயிடச் செய்பவரே!
கீர்த்தனம் பண்ணிடச் செய்பவரே! அல்லேலூயா (4)
180. முகத்தையோ தேடச் சொன்னவரே!
சகாயம் எனக்குச் செய்பவரே! அல்லேலூயா (4)
181. கைவிடா எந்தன் கன்மலையே!
நெகிழ விடாத தேவனே! அல்லேலூயா (4)
182. உமது நன்மையைக் காட்டுபவரே!
திடமனம், இதயம் தருபவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 28

183. செய்கையின் பலனைத் தருபவரே!
சரிக்குச் சரிக்கட்டும் எந்தன் தேவனே! அல்லேலூயா (4)
184. அரணான அடைக்கலமானவரே!
பெலனும் கேடகமானவரே! அல்லேலூயா (4)
185. ஆசீர்கள் அருளும் எந்தன் இயேசுவே!
என்றென்றும் உயர்த்தும் எந்தன் கர்த்தரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 29

186. மகிமையைப் பெற்றிடப் பாத்திரரே!
வல்லமை பெற்றிடப் பாத்திரரே! அல்லேலூயா (4)
187. பரிசுத்தம் விரும்பும் பரிசுத்தரே!
பரிசுத்த அலங்காரம் தருபவரே! அல்லேலூயா (4)
188. முழக்க சத்தம் உடையவரே!
வல்லமை சத்தம் உடையவரே! அல்லேலூயா (4)
189. மகத்துவ சத்தம் உடையவரே!
முறிக்கும் சத்தம் உடையவரே! அல்லேலூயா (4)
190. துள்ளப் பண்ணும் சத்தம் உடையவரே!
பிளக்கப் பண்ணும் சத்தம் உடையவரே! அல்லேலூயா (4)

191. அதிரப் பண்ணும் சத்தம் உடையவரே!
வெளியாக்கும் சத்தம் உடையவரே! அல்லேலூயா (4)
192. பெலனை எமக்கு அருள்பவரே!
சமாதானம் எமக்கருள்பவரே! அல்லேலூயா (4)
193. என்றைக்கும் ராஜாவாய் இருப்பவரே!
சபைக்கு தலையாய் இருப்பவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 30

194. சரீரம் குணமே ஆக்கும் தேவனே!
ஆத்துமா இடறாது காப்பவரே! அல்லேலூயா (4)
195. ஆனந்தக் களிப்பைத் தருபவரே!
மகிழ்ச்சியால் நிரப்பும் எந்தன் தேவனே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 31

196. வலையில் சிக்காதென்னைக் காப்பவரே!
நிந்தைக்கு விலக்கும் எந்தன் இயேசுவே! அல்லேலூயா (4)
197. அவதூறு, திகிலை மாற்றும் தேவனே!
முக ஒளியை வீசும் தேவனே! அல்லேலூயா (4)
198. நன்மைகள் வைத்து வைப்பவரே!
சமூக மறைவில் மறைப்பவரே! அல்லேலூயா (4)
199. ஒளித்து வைத்துக் காப்பவரே!
அரணான நகரத்தில் வைப்பவரே! அல்லேலூயா (4)
200. உண்மையுள்ளோனைக் காப்பவரே!
இடும்புள்ளோனைத் தண்டிப்பவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 32

201. மீறுதல் மன்னித்திடும் எந்தன் இயேசுவே!
பாவங்கள் மூடிடும் பரிசுத்தரே! அல்லேலூயா (4)
202. பாவத்தை எண்ணாதிருப்பவரே!
பாவத்தின் தோஷம் மன்னிப்பவரே! அல்லேலூயா (4)
203. ஜலப்பிரவாகம் நீக்குபவரே!
இரட்சணியப் பாடல்கள் தருபவரே! அல்லேலூயா (4)
204. நடக்கும் வழியைக் காட்டுபவரே!
கண் வைத்து ஆலோசனை சொல்லுபவரே! அல்லேலூயா (4)
205. கிருபையால் என்னைச் சூழ்பவரே!
உமக்குள் களிகூரச் செய்பவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 33

206. புதிதாம் பாட்டினை விரும்புவரே!
நேர்த்தியாய் வாசித்தல் விரும்புபவரே! அல்லேலூயா (4)
207. உத்தம வார்த்தை உடையவரே!
சத்தியச் செய்கை உடையவரே! அல்லேலூயா (4)
208. நீதியில் பிரியமுடையவரே!
நியாயத்தில் பிரியமுடையவரே! அல்லேலூயா (4)

209. வார்த்தையால் வானங்கள் படைத்தவரே!
சுவாசத்தால் சேனைகள் படைத்தவரே! அல்லேலூயா (4)
210. வார்த்தையால் ஆகும்படி செய்பவரே!
கட்டளையிட, நிற்கச் செய்பவரே! அல்லேலூயா (4)
211. பாவிகள் ஆலோசனை கவிழ்ப்பவரே!
ஆலோசனைகளில் பெரியவரே! அல்லேலூயா (4)
212. பாக்கியம் பிள்ளைகட்கு அருள்பவரே!
பாரினைப் பார்க்கின்ற எந்தன் தேவனே! அல்லேலூயா (4)
213. சாவுக்கு விலக்கிடும் சர்வ வல்லவா!
பஞ்சத்தில் காத்திடும் பரிசுத்தரே! அல்லேலூயா (4)

## **சங்கீதம்** - 34

214. எப்போதும் துதிக்கப் பாத்திரரே!
எப்போதும் தோத்திரிக்கப் பாத்திரரே! அல்லேலூயா (4)
215. ஒருவனாய் உயர்த்தப் பாத்திரரே!
ஒருமித்து உயர்த்தவும் பாத்திரரே! அல்லேலூயா (4)
216. எல்லாப் பயமும் போக்குபவரே!
காண்போர்க்குப் பிரகாசம் தருபவரே! அல்லேலூயா (4)
217. இடுக்கண் நீக்கி இரட்சிப்பவரே!
பாளயமிறங்கி விடுவிப்பவரே! அல்லேலூயா (4)
218. நல்லவராய் எமக்கிருப்பவரே!
பாக்கியம் யாவும் தருபவரே! அல்லேலூயா (4)
219. குறைவின்றி எம்மை நடத்துபவரே!
நன்மைகள் யாவையும் தருபவரே! அல்லேலூயா (4)
220. தீமையை விட்டிடச் சொன்னவரே!
நன்மைகள் செய்திடச் சொன்னவரே! அல்லேலூயா (4)
221. சமாதானம் தேடச் சொன்னவரே!
அதனைத் தொடர்ந்திடச் சொன்னவரே! அல்லேலூயா (4)
222. தீமை செய்வோரைப் பகைப்பவரே!
நன்மை செய்வோரை நேசிப்பவரே! அல்லேலூயா (4)
223. நொறுங்குண்ட இதயம் விரும்புபவரே!
நருங்குண்ட ஆவியை விரும்புபவரே! அல்லேலூயா (4)
224. துன்பத்தில் நின்று விடுவிப்பவரே!
எலும்புகளெல்லாம் காப்பவரே! அல்லேலூயா (4)

## **சங்கீதம்** - 35

225. வழக்காடிடும் எந்தன் இயேசுவே!
யுத்தமே பண்ணிடும் எந்தன் கர்த்தரே! அல்லேலூயா (4)
226. வலைக்கு விலக்கிடும் எந்தன் கர்த்தரே!
குழிக்கு விலக்கிடும் எந்தன் இயேசுவே! அல்லேலூயா (4)
227. பலவான் கைக்கு விலக்குபவரே!
கொள்ளையர் கைக்கு விலக்குபவரே! அல்லேலூயா (4)
228. நியாயமே செய்ய எழுபவரே!
வழக்கைத் தீர்க்க எழுபவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 36

229. கிருபைகளில் பெரியவரே!
சத்தியங்களில் பெரியவரே! அல்லேலூயா (4)
230. நீதிகளிலே பெரியவரே!
நியாயங்களிலும் பெரியவரே! அல்லேலூயா (4)
231. ஆலய நன்மைகள் அருள்பவரே!
பேரின்பம் நதி போல் தருபவரே! அல்லேலூயா (4)
232. ஜீவ ஊற்றாலே நிரப்புபவரே!
வெளிச்சத்தில் எம்மை வைப்பவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 37

233. எரிச்சல் கொள்ளாதே என்றவரே!
பொறாமை கொள்ளாதே என்றவரே! அல்லேலூயா (4)
234. நன்மைகள் செய்திடச் சொன்னவரே!
சத்தியம் கைக்கொள்ளச் சொன்னவரே! அல்லேலூயா (4)
235. வழியை ஒப்புவிக்கச் சொன்னவரே!
நம்பிக்கை வைத்திடச் சொன்னவரே! அல்லேலூயா (4)
236. நீதியை வெளிச்சம் போலாக்குபவரே!
நியாயத்தைப் பகல் போலாக்குபவரே! அல்லேலூயா (4)
237. சாந்தமுள்ளோர்க்கு நல்லவரே!
சாந்தமுள்ளோர்க்கு வல்லவரே! அல்லேலூயா (4)
238. துன்மார்க்கர் புயங்களை முறிப்பவரே!
நீதிமான்களையோ தாங்குபவரே! அல்லேலூயா (4)
239. உத்தமரை ஆபத்திலே காப்பவரே!
உத்தமரைப் பஞ்சத்திலும் காப்பவரே! அல்லேலூயா (4)
240. நடைகளை உறுதிப்படுத்துபவரே!
வழிகள் மேல் பிரியம் வைப்பவரே! அல்லேலூயா (4)
241. கையினால் என்னைத் தாங்குபவரே!
கைவிடாது நீதிமானைக் காப்பவரே! அல்லேலூயா (4)
242. நீதிமான் சந்ததியைக் காப்பவரே!
துன்மார்க்கர் சந்ததியை அறுப்பவரே! அல்லேலூயா (4)
243. ஞானத்தை வாயிலே தருபவரே!
நியாயத்தை நாவிலே தருபவரே! அல்லேலூயா (4)
244. வேதத்தை இதயத்தில் தருபவரே!
நடைகள் பிசகாது காப்பவரே! அல்லேலூயா (4)
245. துன்மார்க்கன் கையிலே விடாதவரே!
கொடியோரை அழித்துப் போடுபவரே! அல்லேலூயா (4)
246. சமாதானம் எமக்குத் தருபவரே!
அடைக்கலம், இரட்சிப்பு அருள்பவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 38

247. மாம்சத்தில் ஆரோக்கியம் அருள்பவரே!
எலும்புகளில் சவுக்கியம் தருபவரே! அல்லேலூயா (4)

248. சதையினை என்றும் காப்பவரே!
குடல்களை என்றும் காப்பவரே! அல்லேலூயா (4)
249. இதயத்தை என்றும் காப்பவரே!
உள்ளத்தை என்றும் காப்பவரே! அல்லேலூயா (4)
250. கண்களை என்றும் காப்பவரே!
காதுகளை, வாயினைக் காப்பவரே! அல்லேலூயா (4)
251. கால்களை என்றும் காப்பவரே!
கைகளை விடாது காப்பவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 39

252. நாவினை அடக்கு என்றவரே!
நாவால் பாவம் செய்யாதே என்றவரே! அல்லேலூயா (4)
253. தியானிக்கையில் அக்கினி அருள்பவரே!
இதயத்தில் அக்கினியைத் தருபவரே! அல்லேலூயா (4)
254. நித்தியமாய் வாழ்கின்ற எந்தன் இயேசுவே!
நித்திய வாழ்வினைத் தருபவரே! அல்லேலூயா (4)
255. மூடனின் நிந்தனை நீக்குபவரே!
கோபத்தை என்றென்றும் வையாதவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 40

256. அடிகளை உறுதிப்படுத்துபவரே!
கன்மலை மேலே நிறுத்துபவரே! அல்லேலூயா (4)
257. புதுப்பாட்டை நாவில் தருபவரே!
நம்புவோர்க்கு பாக்கியம் தருபவரே! அல்லேலூயா (4)
258. அதிசயம் அநேகம் செய்பவரே!
ஆலோசனை அநேகம் அருள்பவரே! அல்லேலூயா (4)
259. பலியாய் எமக்காய் வந்தவரே!
பலிகளை அழித்திட வந்தவரே! அல்லேலூயா (4)
260. நீதியைப் பிரசங்கிக்கச் சொன்னவரே!
சத்தியத்தைச் சொல்லச் சொன்னவரே! அல்லேலூயா (4)
261. கிருபையால், உண்மையால் காப்பவரே!
அவைகளை அறிவிக்கச் சொன்னவரே! அல்லேலூயா (4)
262. அழிக்கின்ற மக்கட்கு விலக்குபவரே!
சீக்கிரம் சகாயம் செய்பவரே! அல்லேலூயா (4)
263. எந்தன் மேல் நினைவாயிருப்பவரே!
எந்தனின் துணையாயிருப்பவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 41

264. இரங்குவோர்க்கு இரங்கிடும் எந்தன் இயேசுவே!
வியாதியில் தாங்கிடும் கர்த்தர் இயேசுவே! அல்லேலூயா (4)
265. எந்தன் மேல் பிரியம் வைத்துள்ளவரே!
உமது சமுகத்தில் வைப்பவரே! அல்லேலூயா (4)
266. இஸ்ரவேலின் தேவனாம் எந்தன் இயேசுவே!
அநாதி தோத்திரப்பாத்திரரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 42

267. எந்தனின் ஆத்துமாவின் வாஞ்சையே!
எந்தனின் தேவாதி தேவனே! அல்லேலூயா (4)
268. சமுகத்து இரட்சிப்பை அருள்பவரே!
முகத்துக்கு இரட்சிப்பைத் தருபவரே! அல்லேலூயா (4)
267. பகலிலே கிருபை அருள்பவரே!
இரவிலே பாடல் தருபவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 43

268. வெளிச்சத்தை அனுப்பிடும் எந்தன் நேசரே!
சத்தியத்தை அனுப்பிடும் எந்தன் கர்த்தரே! அல்லேலூயா (4)
269. பரிசுத்த பர்வதம் அழைப்பவரே!
வாசஸ்தலங்களுக்கு இழுப்பவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 44

270. கையினால் ஜாதிகளைத் துரத்துபவரே!
கையினால் எம்மையே நாட்டுபவரே! அல்லேலூயா (4)
271. கையினால் பரவச் செய்பவரே!
தேசத்தை கட்டிடச் செய்பவரே! அல்லேலூயா (4)
272. ராஜாதி ராஜா எந்தன் கர்த்தரே!
முகத்தின் ஒளியினை வீசுபவரே! அல்லேலூயா (4)
273. இரட்சிப்பைக் கட்டளையிடுபவரே!
எமக்காய் விழித்துக் கொள்பவரே! அல்லேலூயா (4)
274. எழுந்து யுத்தமே செய்பவரே!
கிருபையால் மீட்டுக் கொள்பவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 45

275. அருளை எங்கள் மேல் பொழிபவரே!
மிகுந்த சவுந்தரியமுடையவரே! அல்லேலூயா (4)
276. மகிமையான பட்டயம் உடையவரே!
மகத்துவப் பட்டயம் உடையவரே! அல்லேலூயா (4)
277. வலக்கரத்தால் யுத்தம் செய்பவரே!
அம்புகளால் யுத்தம் செய்பவரே! அல்லேலூயா (4)
278. ஆனந்தத்தைலத்தை உடையவரே!
வாசனை வஸ்திரம் உடையவரே! அல்லேலூயா (4)
279. மணவாட்டிகளையோ உடையவரே!
மணவாளன் எந்தன் இயேசு ராஜாவே! அல்லேலூயா (4)
280. எந்தனின் நினைவாய் இருப்பவரே!
பணிந்திட என்றும் பாத்திரரே! அல்லேலூயா (4)
281. பூரண மகிமை அருள்பவரே!
மகிமையை வழிந்திடச் செய்பவரே! அல்லேலூயா (4)
282. அலங்கார வஸ்திரங்கள் தருபவரே!
பரலோகம், ஆளுகை தருபவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 46

283. அடைக்கலம், பெலனுமானவரே!
ஆபத்தில் துணையாயிருப்பவரே! அல்லேலூயா (4)

284. பூகம்பங்கள் வந்தாலும் காப்பவரே!
சுனாமி வந்தாலும் காப்பவரே! அல்லேலூயா (4)
285. எங்களின் நடுவிலே இருப்பவரே!
சகாயம், சந்தோஷம் தருபவரே! அல்லேலூயா (4)
286. சேனைகளின் கர்த்தர் எந்தன் நேசரே!
எம்மோடிருக்கும் எங்கள் கர்த்தரே! அல்லேலூயா (4)
287. யாக்கோபின் தேவனாம் எந்தன் கர்த்தரே!
எமக்கு உயர்ந்த அடைக்கலமே! அல்லேலூயா (4)
289. இரதங்களை எல்லாம் எரிப்பவரே!
ஈட்டியை, வில்லினை முறிப்பவரே! அல்லேலூயா (4)
290. ஜாதிகளுக்குள்ளே உயர்ந்தவரே!
பூமியெங்கும் உயர்ந்தவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் – 47

291. மகத்துவராஜா எந்தன் இயேசுவே!
பூமியெங்கும் பயங்கரமானவரே! அல்லேலூயா (4)
292. பாவிகளைக் கீழ்ப்படுத்துபவரே!
சிறப்பான தேசமருள்பவரே! அல்லேலூயா (4)
293. பூமியனைத்திற்கும் ராஜாவே!
போற்றிப்பாடிடப் பாத்திரரே! அல்லேலூயா (4)
294. பரிசுத்த சிங்காசனமுடையவரே!
பிரபுக்களாய் எம்மை வைப்பவரே! அல்லேலூயா (4)
295. பூமியின் கேடகங்கள் உடையவரே!
பூமியைப் பாதுகாப்பவரே! அல்லேலூயா (4)
296. மிகவும் உன்னதமானவரே!
என்றுமே பாடிடப் பாத்திரரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் – 48

297. பெரியவர் எல்லாரிலும் பெரியவரே!
மிகவும் துதித்திடப் பாத்திரரே! அல்லேலூயா (4)
298. சீயோன் பர்வதம் உடையவரே!
மிகவும் பெரிய ராஜாவே! அல்லேலூயா (4)
299. ஆவியாலே யுத்தம் செய்பவரே!
விரோதிகளைக் கலங்கிடச் செய்பவரே! அல்லேலூயா (4)
300. ஆலயத்தில் கிருபையை அருள்பவரே!
பெரிய நாமமுடையவரே! அல்லேலூயா (4)
301. நீதியால் மிகவும் நிறைந்தவரே!
நியாயங்கள் செம்மையாய் செய்பவரே! அல்லேலூயா (4)
302. என்றென்றைக்கும் எம்முடைய தேவனே!
மரணபரியந்தம் நடத்துபவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் – 49

303. ஆத்துமாவைப் பரதீஸில் வைப்பவரே!
பாவியைப் பாதாளம் தள்ளுபவரே! அல்லேலூயா (4)

## சங்கீதம் - 50

304. வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்பவரே!
அக்கினி, மகாபுசல் உடையவரே! அல்லேலூயா (4)

305. ஜீவ ப□யினையோ விரும்புபவரே!
தோத்திரப□யினை விரும்புபவரே! அல்லேலூயா (4)

306. இரத்தத்தை சாத்தான் போல் குடிக்காதவரே!
சர்வமும் படைத்திட்ட எந்தன் இயேசுவே! அல்லேலூயா (4)

## புதியவெப்ஸைட்

I 1. **VISIT OUR NEW WEBSITE**
(எங்கள் புதிய வெப்ஸைட்டை அணுகவும்)

2. **WEBSITE ADDRESS IS www.hosannahchurch.org**
(இணையதள முகவரி: www.hosannahchurch.org)

3. **FEATURES INSIDE** (உள்ளே)

1. PRAYERS IN ENGLISH (ஆங்கிலத்தில் ஜெபங்கள்)
2. PRAYERS IN TAMIL (தமிழில் ஜெபங்கள்)
3. DAILY BREAD (ENG) (அனுதின மன்னா □ ஆங்கிலம்)
4. YOUTH PAGE (வா□ர் பகுதி □ஆங்கிலம்)
5. MESSAGE FOR THE WEEK (வார செய்தி - ஆங்கிலம்)
6. THOUGHT FOR TODAY (இன்றைய சிந்தனை துளிகள் □ஆங்கிலம்)
7. PROMISE GALLERY (ENG) (வாக்குத்தத்தங்கள் □ஆங்கிலம்)
8. PROPHETIC PAGE (தீர்க்கதரிசன பக்கம்)
9. PRAYER POINTS (ஜெபக்குறிப்புகள்)
10. FREQUENTLY ASKED QUESTIONS
(அடிக்கடி கேட்கப்படும் கேள்வியும் பதிலும்)

## இலவச அறுவை சிகிச்சை

பிறவி சம்பந்தக் குறைபாடுகளை பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை மூலம் ஜெர்மன் மருத்துவர்களால் இலவசமாக சரி செய்ய கொடைக்கானல் பாசம் மருத்துவமனையோடு தொடர்பு கொள்ளவும்.

&: (04542) 240668


**Dr. பிரின்ஸ்டன் ஜாய்**, M.B.B.S.,
**Dr. சூசன் பிரின்ஸ்டன்**, M.B.B.S.,
ஓசன்னா ஆலயம், **ஜாய் ஆஸ்பத்திரி**,
**பணகுடி**□ 627 109, **தமிழ்நாடு**. & : (954637) 245273
WEB: www.hosannahchurch.org

1. *Published By :*
**Rev. Dr. Princeton Joy,** M.B.B.S.,

2. *Owned By :*
**Rev. Dr. Princeton Joy,** M.B.B.S.,

3. *Published From :*
**Rev. Dr. Princeton Joy,** M.B.B.S.,
86/222H, Main Road,
Panagudi, Tirunelveli District

4. *Printed By :*
**Mr. Xavier Michael**

5. *Press Name with Full Address :*
**FRAN PRINTING PRESS**
**Mr. Xavier Michael,**
490/2, K.P. Road, Nagercoil - 2.

6. *Name of Editor :*
**Rev. Dr. Princeton Joy,** M.B.B.S.,

7. *Title of News Paper :*
**Pattayam (T/M)**

8. *Registration Number (RNI) :*
**TNTAM / 2004 / 14466**

9. Periodicity : **MONTHLY**




To..........................................................
..........................................................
..........................................................
..........................................................


*If undelivered please return to :*
**Dr. Princeton Joy,** M.B.B.S
**Dr.Susan Princeton,** M.B.B.S
✆ : (954637) 245273
HOSANNAH CHURCH, JOY HOSPITAL
222H, MAIN ROAD, PANAGUDI - 627109.
TIRUNELVELI DISTRICT,
TAMIL NADU, INDIA.


**படியுங்கள், ஜெபியுங்கள், அனைவரும் படிக்க கொடுத்து உதவுங்கள்.**